Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.881/2019 |
| Police station | : | Thookanampakkam P.S |
| Deposition of witness for Prosecution | : | LW 10/ PW 7 |
| Name | : | ரவிக்குமார் |
| Father Name/Husband Name | : | சண்முகம் |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.06.2024.

எதிரி ஆஜர்,

**மு.வி.**

நான் தற்போது பாண்டிச்சேரி பாகூரில் வசித்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் இறந்துபோன தமிழ்வாசன் (எ) முருகன் எனது சித்தப்பா மகன் ஆவார். சுமார் 2 வருடத்திற்கு முன்பு தேதி மாதம் சரியாக ஞாபகமில்லை. போலிசார் பிரேத விசாரணை செய்தபோது, நான் உடனிருந்தேன் என்னை விசாரிக்க வில்லை.

**<u>சாட்சியை அரசுதரப்பில் பகுதியளவு பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதின்பேரில் அனுமதியளித்து அ.த.கு.வி.</u>**

கடந்த 01.05.2018 ஆம் தேதி காலை சுமார் 6 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது, எனது சித்தப்பா மகன் தமிழ்வாசன் (எ) முருகன் அவர் நண்பர்களுடன் இருசக்கர வாகனத்தில் ஏம்பலம் சென்றுவிட்டு திரும்ப வந்தபோது நல்லாத்தூர் ராசாப்பாளையம் மெயின்ரோட்டில் சிமெண்ட் கல் கம்பெனிக்கு அருகே விபத்து ஏற்பட்டு புதுச்சேரி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக செய்தியறிந்து நான் சென்று பார்த்தேபோது 01.05.2018 ஆம் தேதி போலிசார் பிரேத விசாரணை

செய்தார்கள் என்றும் அப்போது நான் உடனிருந்தேன் என்றும், போலிசார் என்னை விசாரணை செய்தபோது நடந்த விவரங்களை கூறிவிட்டு தற்போது எதிரி என் தம்பி முருகனின் நண்பன் என்பதால் அவர் என்னை கேட்டுக்கொண்டதன்பேரில் அவரை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டி பகுதியாக பிறழ் சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.881/2019 |
| Police station | : | Thookanampakkam P.S |
| Deposition of witness for Prosecution | : | LW 11/ PW 8 |
| Name | : | கார்த்திக் |
| Father Name/Husband Name | : | குமார் |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.06.2024.

எதிரி ஆஜர்,

**மு.வி.**

நான் தற்போது பள்ளிப்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் இறந்துபோன தமிழ்வாசன் (எ) முருகன் எனது சித்தப்பா மகன் ஆவார். சுமார் 4 வருடத்திற்கு முன்பு தேதி மாதம் சரியாக ஞாபகமில்லை. மருத்துவமனையில் போலிசார் பிரேத பரிசோதனை செய்யும்போது நான் உடனில்லை போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சியை அரசுதரப்பில் பகுதியளவு பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதின்பேரில்</u>**

**<u>அனுமதியளித்து அ.த.கு.வி.</u>**

கடந்த 30.04.2018 ஆம் தேதி இரவு சுமார் 12.00 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது, எனது சித்தப்பா மகன் தமிழ்வாசன் (எ) முருகன் அவர் நண்பர்களுடன் இருசக்கர வாகனத்தில் ஏம்பலம் சென்றுவிட்டு திரும்ப வந்தபோது நல்லாத்தூர் ராசாப்பாளையம் மெயின்ரோட்டில் சிமெண்ட் கல் கம்பெனிக்கு அருகே விபத்து ஏற்பட்டு புதுச்சேரி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக செய்தியறிந்து

நான் சென்று பார்த்தேபோது 01.05.2018 ஆம் தேதி போலிசார் பிரேத விசாரணை செய்தார்கள் என்றும் அப்போது நான் உடனிருந்தேன் என்றும், போலிசார் என்னை விசாரணை செய்தபோது நடந்த விவரங்களை கூறிவிட்டு தற்போது எதிரி என் தம்பி முருகனின் நண்பன் என்பதால் அவர் என்னை கேட்டுக்கொண்டதன்பேரில் அவரை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டி பகுதியாக பிறழ் சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல,

Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.881/2019 |
| Police station | : | Thookanampakkam P.S |
| Deposition of witness for Prosecution | : | LW 12 / PW 9 |
| Name | : | செல்வம் |
| Father Name/Husband Name | : | |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.06.2024.

எதிரி ஆஜர்,

**மு.வி.**

நான் தற்போது பள்ளிப்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் இறந்துபோன தமிழ்வாசன் (எ) முருகன் எனது சித்தப்பா மகன் ஆவார். சுமார் 4 வருடத்திற்கு முன்பு தேதி மாதம் சரியாக ஞாபகமில்லை. மருத்துவமனையில் போலிசார் பிரேத பரிசோதனை செய்யும்போது நான் உடனில்லை போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சியை அரசுதரப்பில் பகுதியளவு பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதின்பேரில் அனுமதியளித்து அ.த.கு.வி.</u>**

கடந்த 30.04.2018 ஆம் தேதி இரவு சுமார் 12.00 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது, எனது சித்தப்பா மகன் தமிழ்வாசன் (எ) முருகன் அவர் நண்பர்களுடன் இருசக்கர வாகனத்தில் ஏம்பலம் சென்றுவிட்டு திரும்ப வந்தபோது நல்லாத்தூர் ராசாப்பாளையம் மெயின்ரோட்டில் சிமெண்ட் கல் கம்பெனிக்கு அருகே விபத்து ஏற்பட்டு புதுச்சேரி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக செய்தியறிந்து நான் சென்று பார்த்தேபோது 01.05.2018 ஆம் தேதி போலிசார் பிரேத விசாரணை

செய்தார்கள் என்றும் அப்போது நான் உடனிருந்தேன் என்றும், போலிசார் என்னை விசாரணை செய்தபோது நடந்த விவரங்களை கூறிவிட்டு தற்போது எதிரி என் தம்பி முருகனின் நண்பன் என்பதால் அவர் என்னை கேட்டுக்கொண்டதன்பேரில் அவரை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டி பகுதியாக பிறழ் சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.881/2019 |
| Police station | : | Thookanampakkam P.S |
| Deposition of witness for Prosecution | : | LW 13 / PW 10 |
| Name | : | மருத்துவர் ராஜேஷ் |
| Father Name/Husband Name | : | |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.06.2024.

எதிரி ஆஜர்,

<u>முதண்மை விசாரணையில்</u>

நான் தற்போது பாண்டிச்சேரி இந்திராகாந்தி மருத்துவக்கல்லூரி மருத்துமவமனையில் துணை பேராசியராக பணிபுரிந்துவருகிறேன், நான் கடந்த 02.05.2018 ஆம் தேதி மேற்படி மருத்துவமனையில் பணியில் இருந்தபோது அன்றைய தினம் காலை 09.15 மணியளவில் தூக்கணம்பாக்கம் காவல் நிலைய குற்ற எண்.53/2018 சட்டப்பிரிவுகள் 279,304 அ இதச வழக்கில் இறந்துபோன தமிழ்வாசன் என்பவரது இறப்பிற்கான காரணம் அறியும் பொருட்டு, அவரது உடலை சடலக்கூறாய்வு செய்ய வேண்டி துக்கணாம்பாக்கம் காவல் நிலைய காவலர் சுகுமார் என்பவர் மூலம் தூக்கணாம்பாக்கம் காவல் ஆய்வாளர் வேண்டுகோள் கடிதம் அளித்தார். அதை நான் பெற்றுக்கொண்டு காவலர் சுகுமார் அடையாளம் காட்டிய மேற்சொன்ன பிரேதத்தினை காலை 09.30 மணியளவில் சடலக்கூறாய்வு செய்ய தொடங்கினேன். மேற்படி பிரேதத்தில்,

**<u>கீழ் கண்டவாறான வெளிகாயங்கள் காணப்பட்டது</u>**

1. அவரது இரண்டு கன்னங்களின் மேல்பகுதியல் 10x 6 c.m அளவிலான காயம் சிவந்த

நிறத்தில் காணப்பட்டது.

2. அவரது பின்தலைப்பகுதியில் 5x4 செ,மீ அளவில் கன்னிய வீக்கக்காயம் காணப்பட்டது,

3. அவரது வலது தோள்பட்டையில் 9x4 செ.மீ அளவிலான சிராய்ப்பு காயம் காணபப்பட்டது.

4. அவரது இடது முன்கை பகுதி 11x6 செ.மீ அளவிலான பலதரப்பட்ட சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது.

5. அவரது வலது கால் முட்டி கால்பகுதியில் 2x1 செ.மீ அளவில் சிவந்த சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

6 அவரது இடது கால் பாதத்தின் முன்புற பகுதியில் 3x2 செ.மீ அளவில் இரண்டு சிவந்த நிற சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது.

**கீழ்கண்டவான உள்காயங்கள் அவர் சடலக்கூறாய்வில் காணப்பட்டது**

1. அவரது மண்டைஓட்டின் வலதுப்புற வெளிப்பகுதியில் 21x11 செ.மீ அளவில் இரத்தக்கட்டு காணப்பட்டது.

2. அவரது மண்டை ஓட்டின் வலது முன்புறம் நடுப்பகுதி, பின்பகுதியில் 18x6 செ.மீ எலும்பு முறிவும், இரத்தக்கசிவும் காணப்பட்டது.

3. அவர் மூளைப்பகுதியின் மேல்திசுவில் கிழிந்த காயம் காணப்பட்டது.

4. அவரது மூளை சிதைந்து இரத்த்க்கட்டுடன் எலும்பு முறிவும் காணப்பட்டது.

5. கழுத்து எலும்பு மற்றும் தண்டுவடம் நல்ல நிலையில் இருந்தது.

6. நாக்கு உள்ளடங்கி, வாய் மூடியநிலையில் உள்ளது.

7. மார்பெலும்பு நெஞ்சுப்பகுதி, மண்ணீரல், இதயம், இதய மேற்பகுதிய ஆகியவை நல்ல நிலையில் இருந்தது.

8. நுரையீரல், மண்ணீரல், கல்லீரல், சிறுநீரகம் நசுங்கி காணப்பட்டது

காலை 10.30 மணிக்கு சடலக்கூறாய்வை முடித்தேன், எனது ஆய்வின்படி மேற்படி நபரின் இறப்பானது மருத்துவமனையில் சவக்கிடங்கில் வைப்பதற்கு 12 மணிநேரத்திற்கு முன்னர் ஏற்பட்டிருக்கக்கூடும், மேற்படி நபரின் இறப்பானது அவருடைய மூளைப்பகுதி மற்றும் மண்டை ஒட்டுப்பகுதியில் அடிப்பட்ட அழுத்தத்தினால் ஏற்பட்ட காயங்களினாலும், இறந்திருக்கலாம்எ ன்று சான்றளிக்கிறேன். **( மேற்படி சடலக்கூறாய்வு அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.**